DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.333/2022**

Deposition of witness for Prosecution அ.சா.6

| | | |
|---|---|---|
| பெயர் | : | சேதுராமன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ஆறுமுகம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 27.04.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் வளங்காவயல் கிராமத்தில் வசித்து வருகிறேன். அ.சா.1 மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரையும் தெரியும். கடந்த 07.08.2022 ம் தேதி காலை 11 மணி அளவில் அ.சா.1 ன் வீட்டிற்கு அருகில் இரைச்சல் கேட்டது. நான் என் வீட்டில் இருந்து அங்கு ஓடிச்சென்றேன். அ.சா.1 ற்கும் எதிரிகளுக்கும் பாதை பிரச்சனை தொடர்பாக சண்டை நடந்தது. அப்போது பிரச்சனை வேண்டாம் என்று நாங்கள் சொல்லிக்கொண்டிருந்தோம். அப்போது அ.சா.1 இடத்தில் இருந்த கல்லுக்காலை எதிரிகள் அனைவரும் உடைத்துவிட்டு கைகலப்பும் நடந்து விட்டது. அ.சா.1 ன் மனைவியை 4 ம் எதிரி பாண்டி அடித்துவிட்டார். அப்போது உடைந்த கல்லுக்காலை எடுத்து அ.சா.1 ன் தலையில் போடுவதற்கு 4 வது எதிரி பாண்டி கொண்டு போனார்.

நாங்கள் தடுத்து சமாதனம் செய்தோம். பின்னர் ஆறாவயல் போலீசுக்கு போன் செய்தோம். அவர்கள் வந்து விசாரித்தார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் சம்பவம் நடந்த தினத்தன்று காலை 11.30 மணியளவில் விசாரித்தார்கள். சம்பவம் சுமாராக 30 நிமிடங்கள் நடந்திருக்கும். சம்பவத்தின்போது நான் விலக்கிவிட்டேனா என்றால் ஆமாம். சம்பவம் நடக்கும்போது இரு தரப்பிலும் வீடியோ எடுக்கப்பட்டது என்றால் எடுக்கவில்லை. அ.சா.1 வீடியோ எடுத்து காவல் துறையில் ஒப்படைத்திருந்தால் அது பொய்யான வீடியோ என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி வீடியோவை பார்த்தால் நான் சம்பவ இடத்தில் இருந்தேனா என்பது பற்றி தெரியுமா என்றால் அவ்வாறு வீடியோ எடுக்கப்பட்டிருந்தால் தெரியவரும், அவர்கள் வீடியோ எடுத்தார்களா என்று தெரியாது. நான் முதல் விசாரணையில் சொன்னதைதான் போலீசார் விசாரணையிலும் சொன்னேனா என்றால் ஆமாம். அ.சா.1 எனக்கு என்ன உறவு முறை என்றால் அ.சா.1 எனக்கு பங்காளி, எதிரிகளும் எனக்கு பங்காளிகள்தான். சம்பவம் நடந்த இடம் அரசுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் இல்லை. நான் போலீசார் விசாரணையில் சம்பவ இடம் அரசுக்கு பாத்தியப்பட்ட இடம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இடம் எதிரிகளுக்கு எந்த பத்திரத்தின் அடிப்படையில் பாத்தியம் என்று தெரியாது. பத்திரம் இருக்கிறது என்று சொன்னார்கள். வழக்கு சம்பவம் நடக்கும்போது தேவகோட்டை வட்டாட்சியர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர்கள் சம்பவ இடத்திற்கு வந்தார்களா என்றால் இல்லை. கடந்த 2 வருடங்களாக எனக்கும் எதிரிகளுக்கும் பேச்சு வார்த்தை இல்லை

என்றால் சரியல்ல. பத்திரங்களை நான் பார்க்கவில்லை என்றும் ஐயப்பன் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். சாட்சி சொல்வதற்கு ஐயப்பன்தான் கூட்டிக்கொண்டு வந்திருக்கிறார் என்றால் எனக்கு உடல்நிலை சரியில்லாததால் என்னை அழைத்து வருவதற்காக வந்துள்ளார். புகார் கொடுக்கும்போது நான் காவல் நியைத்திற்கு சென்றேனா என்றால் இல்லை. சொன்ன தேதியில் சொன்ன மாதிரி சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் அ.சா.1 எனக்கு உறவினர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை: இல்லை**</u>

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.